**நீதித்துறை நடுவர்நீதிமன்றம் எண்.1, மன்னார்குடி**

முன்னிலை: திரு.ஜெ. தமிழ்முருகன்,பி.ஏ.,பி.எல்.,

நீதித்துறை நடுவர் எண்.1 , மன்னார்குடி,

2026-ஆம் ஆண்டு மார்ச் மாதம் 13 ஆம் நாள் வெள்ளிக்கிழமை

**ஆண்டுப்பட்டியல் வழக்கு எண்.99/2019**

# CASE SUMMARY

| Sl.No | Description | Remarks | |
|---|---|---|---|
| 1 | The period of remand of the accused | Remanded - A1, A2- 01.12.2018<br><br>Released - A1 -21.12.2018<br>A2- 29.12.2018 | |
| 2 | The date of filing of complaint/final report in the Court | 07.03.2019 | |
| 3 | The date of committal of the case to the Court of Sessions | Not Applicable | |
| 4 | The date of Questioning of accused U/S 228, 240, 246 and 251 of the Code of Criminal producer 1973 as the case may be | 16.03.2020 | |
| 5 | Filing of all miscellaneous petitions and their result including the results on challenge before superior Court. Except routine petitions like petition under section 317 of the Code . | Nil | |
| 6 | Date of examination in Chief and Cross examination of a witness | Chief | Cross |
| | | PW1 –26.06.2025 | 26.06.2025 |
| | | PW2 – 18.07.2025 | 18.07.2025 |
| | | PW3 –26.02.2026 | 26.02.2026 |
| 7 | Date of examination of the accused | 06.03.2026 | |



JAYARAMAN TAMIZHMURUGAN

Digitally signed by JAYARAMAN TAMIZHMURUGAN
DN: cn=JAYARAMAN TAMIZHMURUGAN, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Date: 2026.03.13 07:41:21 +0530

| | | |
|---|---|---|
| | under section 351(1)(b)BNSS of the Court | |
| 8 | Details of Abscondence of an accused and his appearance /production, as the case may be | Not Applicable |
| 9 | Grant of stay by superior Courts and the results thereof | Not Applicable |

| | | |
|---|---|---|
| **அரசுக்கா: காவல் ஆய்வாளர்**,<br>மன்னார்குடி நகர காவல் நிலையம்,<br>குற்ற எண்.632/2018<br>ச/பி.379 r/w 34 இ.த.ச | | ......குற்ற முறையீட்டாளர் |
| | / எதிர்/ | |
| 1. ராகுல்பாண்டியன், வயது 20/2020,<br>த/பெ.பாண்டியன்,<br>மருதுபாண்டியர் நகர்,<br>மன்னார்குடி.<br><br>2. பரணிதரன், வயது 20/2020,<br>த/பெ.ராஜகோபால்,<br>6 ம் எண் வாய்க்கால்,<br>மதுக்கூர் ரோடு,<br>மன்னார்குடி. | | .....எதிரிகள் |

இவ்வழக்கானது கடந்த 07.03.2019 ஆம் தேதியன்று இந்நீதிமன்ற கோப்புக்கு எடுக்கப்பட்டு, இது நாள் வரை இந்நீதிமன்றத்தின் கவனமான பரிசீலனையில் இருந்து வந்து, 10.03.2026 ம் தேதியன்று இந்நீதிமன்றத்தின் முன்பாக இறுதி விசாரணைக்கு வரப்பெற்று, குற்ற முறையீட்டாளர் தரப்பில் அரசு குற்றத்துறை உதவி வழக்கறிஞர் நிலை 2 அவர்களும், 1வது எதிரி தரப்பில் வழக்கறிஞர்



JAYARAMAN TAMIZHMURUGAN
Digitally signed by JAYARAMAN TAMIZHMURUGAN DN: cn=JAYARAMAN TAMIZHMURUGAN, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Date: 2026.03.13 07:41:26 +0530

திரு.துரைவீரையன் அவர்கள் ஆஜராகியும், 2 வது எதிரி தரப்பில் வழக்கறிஞர் திரு.வி.ராஜகோபால் அவர்கள் ஆஜராகியும், இருதரப்பு வாதங்கள் கேட்டுகப்பட்டும், இன்று (13.03.2026) இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்......

**//தீர்ப்புரை//**

**1.அரசு தரப்பு வழக்கின் சுருக்கம்**

கடந்த 15.11.2018 ம் தேதி 18.00 மணிக்கு மன்னார்குடி முல்லை நகர் கோல்டன் அப்பார்ட்மெண்ட் எதிர்புறம் சாட்சி-1 வீரசேகரன் என்பவருக்கு சொந்தமான 70,000/- மதிப்புள்ள TN 50 S 8583 என்ற எண்ணுள்ள பஜாஜ் பல்சர் 150 DTSI மோட்டார் சைக்கிளை திருடிய எதிரிகளின் செய்கையானது சட்டப்பிரிவு 379 இ.த.ச வின் கீழ் குற்றம் புரிந்துள்ளதாக மன்னார்குடி நகர காவல் ஆய்வாளர் அவர்கள் குற்ற அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

**2.நகல் வழங்கல்**

எதிரிகளுக்கு அழைப்பாணை அனுப்பப்பட்டது. எதிரிகள் இந்நீதிமன்றத்தில் ஆஜரானதும் எதிரிகளுக்கு கு.வி.மு.ச. 207 வது பிரிவின் கீழ் நகல்கள் இலவசமாக வழங்கப்பட்டன.

**3.குற்றச்சாட்டு வனைதல்**

எதிரிகளிடம் குற்றம் பற்றி வினவ போதிய முகாந்திரம் இருந்ததால் எதிரிகள் மீது இதச பிரிவு 379 கீழ் கு.வி.மு.ச. பிரிவு 240 ன் படி குற்றச்சாட்டு வனைந்து விளக்கிக் கூறி வினவியபோது எதிரிகள் குற்றச்சாட்டை மறுத்தார்கள். எனவே அரசு தரப்பு சாட்சிகள் விசாரணைக்கு உத்தரவிடப்பட்டது. அரசு தரப்பில் அசா.1 முதல் 3 வரையான சாட்சியங்கள் விசாரிக்கப்பட்டும், சான்றாவணங்கள் அசாஆ. 1 முதல் 8 வரையும், சான்று பொருள் ஒன்று குறியீடு செய்யப்பட்டுள்ளது.

JAYARAMAN TAMIZHMURUGAN

Digitally signed by JAYARAMAN TAMIZHMURUGAN
DN: cn=JAYARAMAN TAMIZHMURUGAN, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Date: 2026.03.13 07:41:30 +0530

**4.அரசு தரப்பு சாட்சியங்களிலிருந்து புலப்படும் அரசு தரப்பு வழக்கின் சுருக்கம்**

**அசா.1 வீரசேகரன்** தனது சாட்சியத்தில் வெளிநாட்டில் Quality control Inspector ஆக வேலை செய்து வருகிறேன் என்றும், தான் 2018 ம் வருடம் தற்காலிகமாக முல்லை நகரில் குடியிருந்து வருகிறேன் என்றும், கடந்த 10.11.2018 ம் தேதியன்று இரவு 10.00 மணியளவில் வெளியில் சென்று விட்டு தனது இருச்சக்கர வாகனமான Bajaj pulsar நிறுத்திவிட்டு சென்றுவிட்டேன் அரைமணிநேரம் கழித்து வெளியில் நிறுத்தியிருந்த தனது இருச்சக்கர வாகனத்தை காணவில்லை என்றும், எங்கு தேடியும் கிடைக்கவில்லை என்றும், இந்த திருட்டு சம்பவம் தொடர்பாக 15.11.2018 ம் தேதியன்று மனனார்குடி நகர காவல் நிலையம் சென்று புகார அளித்தேன் என்றும், நீதிமன்றத்தில் காட்டப்படும் புகார் மனு தான் கொடுத்ததுதான் என்றும், அதிலுள்ள கையொப்பம் தன்னுடையது தான் என்றும், மேற்படி புகார் வாக்குமூலம் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளதாகவும், தனக்கு 01.12.2018 ம் தேதி தனது இருச்சக்கர வாகனம் கிடைத்து விட்டதாக தனக்கு தகவல் சொன்னார்கள் என்றும், நீதிமன்றத்தில் மனு செய்து தன்னுடைய வாகனத்தை பெற்றுக்கொண்டேன் என்றும், நீதிமன்றத்தில் தன்னிடம் காட்டப்படும் புகைப்படத்தில் உள்ள வாகனம் தன்னுடையது தான் என்றும், புகைப்படத்தில் உள்ள எண்ணிக்கை-5 அசா.பொ.1 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளதாகவும், தன்னுடைய இருச்சக்கர வாகனத்தை திருடியது மருதுபாண்டியன் நகரை சேர்ந்த ராகுல்பாண்டியன் மற்றும் 6 ம் நம்பர் வாய்காலை சேர்ந்த பரணிதரன் என்பதை பின்னர் தெரிந்து கொண்டேன் என்றும், சம்பவம் தொடர்பாக போலீசார் தன்னை விசாரித்தார்கள் என்றும், சாட்சியமளித்துள்ளார்.

**அசா.2 ஸ்ரீதர்** தனது சாட்சியத்தில் தான் LIC ஏஜெண்டாக பணி செய்து வருகிறேன் என்றும், கடந்த 01.11.2018 ம் தேதி காலை 11.00 மணியளவில் மன்னார்குடி ருக்மணி குளம் அருகே தான் நின்று கொண்டிருந்தபோது ராகுல்பாண்டியன் என்பவரிடமிருந்து போலீசார் பெற்ற ஒப்புதல் வாக்குமூலத்திலும்,அதன் அடிப்படையில் காலை 11.30 மணிக்கு கைப்பற்றப்பட்ட TN 50 S 8583 என்ற பதிவெண் கொண்ட பல்சர் இருசக்கர வாகனத்தை கைப்பற்றுதல் மகசர் மூலம் கைப்பற்றியதிலும், தானும் நடராஜன்



JAYARAMAN TAMIZHMURUGAN
Digitally signed by JAYARAMAN TAMIZHMURUGAN DN: cn=JAYARAMAN TAMIZHMURUGAN, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN Date: 2026.03.13 07:41:35 +0530

என்பவரும் சாட்சியாக இருந்து கையொப்பம் செய்தோம் என்றும், மேற்படி கைப்பற்றுதல் மகசர் அசா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளதாகவும், போலீசார் தன்னை விசாரித்தார்கள் என்றும் சாட்சியமளித்துள்ளார்.

**அசா.3 தினேஷ்குமார் காவல் உதவி ஆய்வாளர் (ஓய்வு)** தனது சாட்சியத்தில் தான் சென்னை K8 அரும்பாக்கம் காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து தற்சமயம் பணி ஓய்வு பெற்றுவிட்டேன் என்றும், கடந்த 15.11.2018 ம் தேதியன்று 18.00 மணிக்கு மன்னார்குடி நகர காவல் நிலைய பொறுப்பில் இருந்தபோது முல்லை நகர் கோல்டன் அப்பாட்ர்ட்மெண்டை சேர்ந்த கல்யாணசுந்தரம் மகன் வீரசேகரன் நிலையம் ஆஜராகி கொடுத்த புகார் மனுவை பெற்று நிலைய குற்ற எண்.632/2018 ச/பி. 379 இதச ன் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன் என்றும், மேற்படி முதல் தகவல் அறிக்கையின் அச்சு படிவம் அ.சா.ஆ. 3 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளதாகவும், புலன் விசாரணைக்கு எடுத்துக்கொண்ட தான் அன்றையதினமே 19.00 மணிக்கு சம்பவம் இடம் சென்று சாட்சிகள் பாலகிருஷ்ணன் மற்றும் கோகுல் ஆகியோர்கள் முன்னிலையில் சம்பவ இடத்தினை பார்வையிட்டு மாதிரி வரைபடம் மற்றும் பார்வை மகசர் தயார் செய்தேன் என்றும், சாட்சிகளிடம் கையொப்பமும் பெற்றுள்ளேன் என்றும், பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் அ.சா.ஆ.4 மற்றும் 5 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளதாகவும், பட்டியல் சாட்சிகள் 1 முதல் 5 வரையிலானவர்களை தனித்தனியே விசாரித்து வாக்குமூலங்கள் பதிவு செய்தேன் என்றும், சாட்சிகளை விசாரித்த வகையில் சம்பவம் உண்மை என தெரிய வந்ததும் எதிரிகளை தேடியபோது எதிரிகள் இருவரும் 01.12.2018 ம் தேதியன்று 11.00 மணிக்கு மன்னார்குடி ருக்மணிக்குளம் அருகே மதுக்கூர் ரோட்டில் நின்றுகொண்டிருந்தவர்களை குற்ற காரணம் கூறி கைது செய்து அவர்களிடம் இருந்து எவ்வித அச்சுறுத்தலும், தூண்டுதலும் இன்றி கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை சாட்சிகள் ஸ்ரீதர் மற்றும் நடராஜன் முன்னிலையில் பதிவு செய்தேன் என்றும், மேலும் எதிரிகளிடம் இருந்து 12.15 மணிக்கு மேற்படி அதே சாட்சிகள் முன்னிலையில் முன்பக்கம் பின்பக்கம் பதிவு எண் பலகை இல்லாத கருப்பு கலர் pulzar 150 என்ற வாகனமானது கைப்பற்றுதல் மகசர் மூலம் கைப்பற்றப்பட்டது


JAYARAMAN TAMIZHMURUGAN
Digitally signed by JAYARAMAN TAMIZHMURUGAN DN: cn=JAYARAMAN TAMIZHMURUGAN, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN Date: 2026.03.13 07:41:39 +0530

என்றும், மேற்படி கைப்பற்றுதல் மகசர் அசா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளதாகவும், எதிரிகளை நீதிமன்ற அடைப்பு காவலுக்கு உட்படுத்தினேன் என்றும், கைப்பற்றப்பட்ட வழக்கின் தடயப்பொருட்களை சி.பி.135/2018 ஆக நீதிமன்றத்தில் படிவம் 91 மூலம் ஒப்படைத்தேன் என்றும், படிவம் 91 அ.சா.ஆ.7 ஆக குறியிடு செய்யப்பட்டுள்ளதாகவும், மேற்படி வழக்கின் சாட்சிகளை விசாரித்ததில் இரண்டு எதிரிகளும் பொதுநோக்கத்தோடு இந்த குற்ற செயலில் ஈடுப்பட்டுள்ளதாக தெரியவந்ததால் இவ்வழக்கின் சட்டப்பிரிவை 379 இதச ல் இருந்து 379 r/w 34 இதச ஆக பிரிவு மாற்றம் செய்து சட்டப்பிரிவு மாற்றுதல் அறிக்கை தாக்கல் செய்தேன் என்றும், மேற்படி சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை அசா.ஆ.8 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளதாகவும், இத்துடன் எனது விசாரணை முடித்து சம்பவம் உண்மை என தெரிய வந்தததால் எதிரிகளின் செய்கையானது இதச பிரிவு 379 r/w 34 ன் கீழ் தண்டிக்கத்தக்க குற்றம் என குற்ற இறுதியறிக்கை 30.12.2018 ம் தேதியன்று தாக்கல் செய்துள்ளார் என்றும் சாட்சியமளித்துள்ளார்.

**5. எதிரிகளிடம் பிரிவு 351(1) (பி)BNSS ன் கீழ் வினவுதல்**

மேற்படி அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சியத்திலிருந்து இவ்வழக்கின் எதிரிகளுக்கு பாதகமாக தோன்றியவற்றை தொகுத்து பிரிவு 351(1) (பி)BNSS ன் கீழ் வினவியபோது எதிரிகள் பொய் சாட்சியம் என்றும் பொய் வழக்கு என்றும் கூறி மறுத்தார்கள். எதிரிகள் தரப்பில் சாட்சியாக யாரையும் விசாரிக்கவோ ,ஆவணங்கள் எதுவும் குறியிடப்படவோ இல்லை.

**6. தீர்மானிக்கப்படவேண்டிய விஷயம்**

இவ்வழக்கின் எதிரிகள் மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுகள் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கப்பட்டுள்ளதா? அல்லது இல்லையா? என்பதே தீர்மானிக்க வேண்டிய பிரச்சனை ஆகும்.

JAYARAMAN TAMIZHMURUGAN
Digitally signed by JAYARAMAN TAMIZHMURUGAN
DN: cn=JAYARAMAN TAMIZHMURUGAN, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Date: 2026.03.13 07:41:44 +0530

**7. தீர்வு**

எதிரிகள் மீது இதச பிரிவு 379 ன் கீழ் குற்றச்சாட்டு வனையப்பட்டுள்ளது. மேலும், அரசுத்தரப்பில் அசா.1 முதல் அசா.3 வரையான சாட்சியங்கள் விசாரிக்கப்பட்டும், பட்டியல் சாட்சிகள் 2,3,7 சாட்சிகள் மற்றும் சாட்சிகள் 4,5 பாலகிருஷ்ணன் மற்றும் கோகுல் ஊரில் வசிக்கவில்லை என்று கிராம நிர்வாக அலுவலர் சான்று வழங்கப்பட்டு அரசுத்தரப்பில் விசாரணை செய்யப்படாமல் நீக்கம் செய்யப்பட்டுள்ளது. இவ்வழக்கில் விசாரணை அதிகாரியான பட்டியல் சாட்சி 8 காவல் ஆய்வாளர் திரு.தினேஷ்குமார் காவல் உதவி ஆய்வாளர் அவர்கள் அசா.3 ஆக விசாரணை செய்யப்பட்டு அ.சாஆ.3 முதல் அசாஆ.8 வரையான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

**8)** இவ்வழக்கில் சம்பவத்தின் புகார்தாரர் அசா.1 ஆகவும். அசா.2 பார்வை மகசர் சாட்சியாகவும், அசா.3 புலன் விசாரணை அதிகாரியாகவும் விசாரிக்கப்பட்டுள்ளார்கள்.

**9. குற்றச்சாட்டிற்கான தீர்வு** :

கடந்த 15.11.2018 ம் தேதி 18.00 மணிக்கு மன்னார்குடி முல்லை நகர் கோல்டன் அப்பார்ட்மெண்ட் எதிர்புறம் சாட்சி-1 வீரசேகரன் என்பவருக்கு சொந்தமான 70,000/- மதிப்புள்ள TN 50 S 8583 என்ற எண்ணுள்ள பஜாஜ் பல்சர் 150 DTSI மோட்டார் சைக்கிளை திருடி குற்றம் புரிந்துள்ளதாக எதிரியின் செய்கையானது இதச பிரிவு 379 ன் கீழ் குற்றச்சாட்டு வனையப்பட்டுள்ளது.

10) அரசு தரப்பு வழக்கின்படி சம்பவம் நடந்த நாள் 10.11.2018 ம் தேதி 22.00 மணி. சம்பவ இடம் மன்னார்குடி முல்லை நகர் கோல்டன் அப்பார்ட்மெண்ட் வாதியின் வீட்டின்எதிரே. முதல் தகவல் காவல் நிலையத்திற்கு கிடைத்த நாள் 15.11.2018 ம் தேதி 18.00 மணி. மேற்படி முதல் தகவல் அறிக்கை நீதிமன்றத்தில் பெறப்பட்ட நாள் 01.12.2018 ம் தேதி 09.30 மணி. போலீசார் சம்பவ இடத்தை 15.01.2018 ம் தேதி 19.00 மணிக்கு பார்வையிட்டு பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்துள்ளது ஆவணங்களின் மூலம் தெரிய வருகிறது.

JAYARAMAN TAMIZHMURUGAN

Digitally signed by JAYARAMAN TAMIZHMURUGAN
DN: cn=JAYARAMAN TAMIZHMURUGAN, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Date: 2026.03.13 07:41:49 +0530

11) அசா.1 வீரசேகரன் தன்னுடைய முதல் தகவலில் 10.11.2015 ம் தேதி இரவு 10.00 மணிக்கு காணமல் போனதாக சொல்லப்படும் இருசக்கர வாகனத்தை பல இடங்களில் தேடி பார்த்துவிட்டு 15.11.2018 ம் தேதி தான் புகார் கொடுத்ததாக சாட்சியமளித்துள்ளார். மேலும், முல்லை நகரில் பல வீடுகளில் கண்காணிப்பு கேமரா பொருத்தப்பட்டுள்ளது சரிதான் என்றும், காலதாமதமாக புகார் கொடுத்ததற்கு எவ்வித சிறப்பு காரணமும் இல்லை என்றும் சாட்சியமளித்துள்ளார்.

12) இவ்வழக்கில் 1 ம் எதிரி ராகுல்பாண்டியன் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் வழக்கின் தடயப்பொருள் கைப்பற்றப்பட்டதாக குறிப்பிட்டு ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் கைப்பற்றுதல் மகசர் சாட்சியான அசா.2 சாட்சியமளிக்கவில்லை. மேலும், 01.11.20018 ம் தேதி காலை 11.00 மணிக்கு அசா.2 ஸ்ரீதர் மன்னார்குடி ருக்மணி குளம் அருகே நின்று கொண்டிருந்த போது ராகுல் பாண்டியன் என்பவரிடம் போலீசார் பெற்ற ஒப்புதல் வாக்குமூலத்துடன் அதனடிப்படையில் காலை 11.30 மணிக்கு கைப்பற்றப்பட்ட இருசக்கர வாகனத்தை கைப்பற்றுதல் மகசர் மூலம் கைப்பற்றியதாகவும் சாட்சியமளித்துள்ளார்.

13) அசா.2 ஸ்ரீதர் ராகுல்பாண்டியன் வீடு எங்குள்ளது அவர் என்ன வேலை பார்க்கிறார் என்றால் தெரியாது என்றால் சரிதான் என்றும், வாகனத்தை போலீசார் எங்கிருந்து கைப்பற்றினார் என்றால் மதுக்கூர் ரோடு, ருக்மணிகுளம். போலீசார் எங்கு வைத்து எழுதினார்கள், எங்கு வைத்து கையெழுத்து வாங்கினார்கள் என்றால் ஸ்டேசனில் வைத்து கையெழுத்து வாங்கினார்கள் என்றும் சாட்சியமளித்துள்ளார். அசா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ள கைப்பற்றுதல் மகசரில் 01.12.2018 ம் தேதி 12.15 மணிக்கு மன்னார்குடி ருக்மணி குளம் எதிரில் மதுக்கூர் ரோட்டில் வழக்கின் தடயப்பொருளான கருப்பு கலர் pulsar வாகனம் கைப்பற்றப்பட்டதாக உள்ளது.

14) இந்த வழக்கானது ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் Recovery Mahazar ஆகிய இரண்டு அரசுத்தரப்பு சான்றாவணங்களை அடிப்படையாகக் கொண்ட வழக்கு ஆகும்.

JAYARAMAN TAMIZHMURUGAN
Digitally signed by JAYARAMAN TAMIZHMURUGAN
DN: cn=JAYARAMAN TAMIZHMURUGAN, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Date: 2026.03.13 07:41:53 +0530

இந்த வழக்கில் கண்ணுற்ற சாட்சிகள் இல்லை. அதனால் இந்த வழக்கில் கீழ்க்கண்ட 2 விஷயங்களை பரிசீலிக்க வேண்டியது அவசியமான ஒன்றாக இருக்கிறது.

**1] Identification of accused**

**2] Confession Statement**

15) இந்த வழக்கில் எதிரியிடமிருந்து சா.பொ.1 கைப்பற்றப்பட்டதா? எதிரி தான் குற்றச்செயலில் ஈடுபட்டாரா? என்பதையே தீர்மானிக்க வேண்டும்.

16) இவ்வழக்கில் அசா.2 எதிரியை போலீசார் கைது செய்து எதிரி கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் இவ்வழக்கின் தடயச் சொத்தை போலீசார் அவர் முன்பு சாட்சி நடராஜன் முன்பும் கைப்பற்றியதாகவும், அதற்காக மகசர் தயார் செய்ததாகவும் அதில் தான் சாட்சி கையெழுத்து போட்டதாகவும் மேற்படி கைப்பற்றுதல் நிகழ்வு நடந்த நாள், நேரம், இடம் குறித்தும் சாட்சியமளிக்கவில்லை. மாறாக, காவல் நிலையத்தில் வைத்து இரண்டு கையெழுத்துக்கள் வாங்கினார்கள் என்று ஒப்புக்கொண்டு சாட்சியமளித்துள்ளார். மேற்படி அசா.2 சாட்சியத்திலிருந்து போலீசார் கைப்பற்றுதல் மகசர் சம்பவ இடத்தில் வைத்து தயார் செய்தார்களா? என்பதில் இந்நீதிமன்றத்திற்கு ஐயமே உண்டாகிறது.

17) அரசு தரப்பு சாட்சி 2, எதிரி ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்ததாகவும், அதனடிப்படையில் தடயப்பொருட்கள் கைப்பற்றப்பட்டதாக சாட்சியம் அளிக்காத நிலையில், வழக்கின் விசாரணை அதிகாரி மட்டுமே எதிரியிடமிருந்து சான்று பொருள் கைப்பற்றியதாகவும், தடயப்பொருளை விசாரணை அதிகாரி எதிரியை கைது செய்து அசா.2 ன் முன்னிலையில் விசாரித்து எதிரி கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தில் தடயப்பொருளை கைப்பற்றியதாக சாட்சியமளித்துள்ளதை வைத்து எதிரியிடமிருந்து தான் தடயப்பொருள் கைப்பற்றப்பட்டதாக சந்தேகத்திற்கு இடமின்றி அரசு தரப்பால் நிரூபணம் செய்யப்படவில்லை. இந்த வழக்கில் அரசு தரப்பில் விசாரணை செய்யப்பட்ட அசா.1 மற்றும் அசா.2 வரையிலான சாட்சிகள் எதிரயை குற்றச் சம்பவத்துடன் தொடர்புபடுத்தும் வகையில் எவ்வித சாட்சியமும் அளிக்கவில்லை. எனவே, எதிரிகளின்



JAYARAMAN TAMIZHMURUGAN
Digitally signed by JAYARAMAN TAMIZHMURUGAN DN: cn=JAYARAMAN TAMIZHMURUGAN, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN Date: 2026.03.13 07:41:57 +0530

மீதான குற்றச்சாட்டுகள் சந்தேகத்திற்கு இடமின்றி அரசு தரப்பால் நிரூபணம் செய்யப்படவில்லை என்று இந்நீதிமன்றம் தீர்மானிக்கின்றது.

18) இறுதியாக, இவ்வழக்கின் எதிரிகள் மீது இதச பிரிவு 379 r/w 34 ன் கீழ் குற்றவாளிகள் அல்ல என இந்நீதிமன்றத்தால் தீர்மானிக்கப்பட்டு, பிரிவு 271(1) ன் கீழ் எதிரிகளை இந்நீதிமன்றம் விடுதலை செய்து தீர்ப்பு அளிக்கின்றது.

19) இவ்வழக்கில் வழக்கு தடயச்சொத்தாக தாக்கல் செய்யப்பட்டுள்ள சி.பி.எண். 135/2018 ல் உள்ள முன் பக்கமும், பின் பக்கமும் பதிவு எண் கலகை இல்லாத கருப்பு கலர் pulsar 150 DTSI வாகனம் ஒன்று, Chassis no. MDZA11CZ8EWH18687, Engine No.DHZWEH54776. மேற்படி வாகனத்தை சி.எம்பி.எண். 8160/2018, நாள் 13.12.2018 அன்று மனுதாரர் இடைக்காலமாக பெற்றுச்சென்றுள்ளார். மேற்படி தடயப்பொருளை மேல்முறையீட்டுக் காலத்திற்கு பிறகு அவரே நிரந்தரமாக வைத்துக்கொள்ளவும் அவர் எழுதிக் கொடுத்த பிணைமுறியை ரத்து செய்தும் உத்தரவிடப்படுகிறது.

20) எதிரிகள் எழுதிக்கொடுத்த பிணைமுறி மேல்முறையீட்டுக் காலத்திற்கு பிறகு தானாக ரத்தாக வேண்டியது.

இத்தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, பிழை நீக்கம் செய்யப்பட்டு, இன்று 2026 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 13 ஆம் நாள் என்னால் திறந்த இந்நீதிமன்ற அவையறிய பகரப்பட்டது.

JAYARAMAN TAMIZHMURUGAN
Digitally signed by JAYARAMAN TAMIZHMURUGAN
DN: cn=JAYARAMAN TAMIZHMURUGAN, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Date: 2026.03.13 07:42:01 +0530

நீதித்துறை நடுவர் எண்.1,

மன்னார்குடி.

**1.அரசு தரப்பு சாட்சிகள்**

| | |
|---|---|
| அசா.1 | வீரசேகரன் |

| | |
|---|---|
| அசா.2 | ஸ்ரீதர் |
| அசா.3 | தினேஷ் குமார் காவல் உதவி ஆய்வாளர் (ஓய்வு) |

**2. அரசு தரப்பு சான்றாவணங்கள்**

| | | |
|---|---|---|
| அசா.ஆ.1 | 15.11.2018 | புகார் வாக்குமூலம் |
| அசா.ஆ-2 | 01.12.2018 | கைப்பற்றுதல் மகசரில் உள்ள அசா.2 ன் கையொப்பம் |
| அசா.ஆ.3 | 01.12.2018 | முதல் தகவல் அறிக்கையின் அச்சுப்படிவம் |
| அசா.ஆ.4 | 15.11.2018 | பார்வை மகசர் |
| அசா.ஆ.5 | 16.11.2018 | மாதிரி வரைபடம் |
| அசா.ஆ.6 | 01.12.2018 | கைப்பற்றுதல் மகசர் |
| அசா.ஆ.7 | 01.12.2018 | படிவம் 91 |
| அசா.ஆ. 8 | 30.12.2018 | சட்டப்பிரிவு மாற்று அறிக்கை |

3. அரசு தரப்பு சான்று பொருள் : சி.பி.எண். 135/2018 ல் உள்ள முன் பக்கமும், பின் பக்கமும் பதிவு எண் கலகை இல்லாத கருப்பு கலர் pulsar 150 DTSI வாகனம் ஒன்று, Chassis no. MDZA11CZ8EWH18687, Engine No.DHZWEH54776.

4. எதிரி தரப்பு சாட்சிகள் , சான்றாவணங்கள் மற்றும் சான்று பொருட்கள் : இல்லை

JAYARAMAN TAMIZHMURUGAN

Digitally signed by JAYARAMAN TAMIZHMURUGAN
DN: cn=JAYARAMAN TAMIZHMURUGAN, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Date: 2026.03.13 07:42:06 +0530

நீதித்துறைநடுவர்எண்.1,

மன்னார்குடி.

**<u>குறிப்பு</u>**

1) வழக்கு விசாரணையின்போது எதிரிகள் பிணையில் இருந்தார்கள்.

2) எந்த சாட்சிகளும் மூன்று முறைக்கு மேல் அழைக்கப்படவில்லை.

3)வழக்கின் முடிவு எதிரிகளுக்கும் காவல்துறையினருக்கும் தெரிவிக்கப்பட்டது.

**<u>நகல் பணிந்து சமர்பிக்கப்படுகிறது</u>**

மாண்புமிகு குற்றவியல் தலைமை நீதித்துறை நடுவர் அவர்கள்,

திருவாரூர்.